## முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்

## கோயமுத்தூர்

## அ.வ.எண். 580/2020

15.07.2026

**வா.சா.1 கன்னியம்மாள்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா 7 வது அயிட்ட சொத்தை வாசாஆ 5 ன் படி 02.06.1957 ல் என் தகப்பனார் அமாவாசை கவுண்டர் தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், மூதாதையர் சொத்து வருமானத்தை கொண்டு கிரயம் வாங்கினார். கிரயம் வாங்கிய 7 வதுஅயிட்டசொத்தில் பாதியை 05.07.1990 தேதியிட்ட வாசாஆ 7 செட்டில்மெண்ட் படி தன் மகன் ராமசாமி கவுண்டருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மீதமுள்ள சொத்தை 02.12.1999 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் படி தன் மகன் ராமசாமி கவுண்டருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு அப்போது தெரியாது. 2022 ம் வருடம் தான் தெரியும். தாவா 7 வது அயிட்ட சொத்தை 05.07.1990 மற்றும் 02.12.1999 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணங்களின் படி ராமசாமி கவுண்டருக்கு எழுதி வைத்து விட்டதால் அந்த சொத்தில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வாசாஆ 3 ல் குப்பாண்ட கவுண்டருக்கு வந்த சொத்தை 22.07.2002 தேதியிட்ட கிரய பத்திரத்தின் படி அமாவாசை கவுண்டர் 9 ம் பிரதிவாதிக்கு பத்திர எண் 2253/2002 ன் படி கிரயம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாமல் விற்றுவிட்டார். குப்பாண்ட கவுண்டர் 29.01.1951 ல் காலமாகிவிட்டார் என அந்த கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த 9 ம் பிரதிவாதியின் கிரய பத்திரத்தை நகல் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அங்காயம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் தகப்பனார்அமவாசை கவுண்டருக்கு 19.09.1966 ல் உயில் பதிவு ஆவண எண் 37/1966 ன் படி கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அங்காயம்மாள் 29.07.1989 ல் இறந்துவிட்டதால் உயில் படி அமாவாசை கவுண்டர் தான் சொத்தில் முழு உரிமைதாரர் என்றால் தெரியாது. அங்காயம்மாளுக்கு அமாவாசை கவுண்டர் ஏக புத்திர மகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஆனால் அமாவாசை கவுண்டர் தான் ஒரே மகன். உயில் படி அந்த சொத்து என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்றால்

சரியல்ல. அது மூதாதையர் சொத்து. 3,4 அயிட்ட சொத்துகளை 9 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்து விட்டதால் அந்த சொத்துகளில் நான் பாக உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா 5 வது அயிட்ட சொத்து சம்பந்தமாக கோயம்புத்தூர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அந்த சொத்து 3ம் நபருக்கு உரிமையானது என தீர்ப்பாகியுள்ளது என்றால் தெரியாது . அந்த தீர்ப்பில் கண்ட சொத்து போக மீதமுள்ள 1.50 ஏக்கர் இடத்தை அமாவாசை கவுண்டர் 3 ம் நபருக்கு 08.08.1955 ல் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. தாவா 5 வது அயிட்ட சொத்தில் 1.37 ஏக்கர் சின்னையா கவுண்டருக்கு 1957 ல் பாத்தியப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1955 மற்றும் 1957 ஆண்டுகளிலேயே தாவா 5 வது அயிட்ட சொத்தில் உரிமை மூலத்தை அமாவாசை கவுண்டர் இழந்து விட்டதால் தற்போது அந்த சொத்துகளில் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா 3, 4 அயிட்ட சொத்துகளை 9 ம் பிரதிவாதிக்கு என் தகப்பனார் 2002 ல் கிரயம் கொடுத்துவிட்டதால் அந்த சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. 9 ம் பிரதிவாதியிடம் இருந்து தாவா 3,4 அயிட்ட சொத்துகளை 14 ம் பிரதிவாதி 07.04.2014 தேதியில் கிரயம் வாங்கியுள்ளது சட்டப்படியானது என்றால் சரியல்ல. மேற்படி நீதிமன்ற தீர்ப்பாணை கிரய பத்திரங்கள் ஆகியவகைளை மறைத்து உரிமை மூலம் இல்லாத ஆவணங்களை வைத்து உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கிரயம் கொடுத்த சொத்துகள் யாவும் அவரின் தனிப்பட்ட சொத்துகள் என்றாலும் நான் பாகம் கோர வேண்டி அவைகள் யாவும் மூதாதையர் சொத்து என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா 1 வதுஅயிட்ட சொத்து குறித்து நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. 11 முதல் 14 பிரதிவாதிகள் அமாவாசை கவுண்டரிடம் இருந்து கிரயம் பெற்ற கிரயதாரர்களிடமிருந்து கிரய பத்திரம் மூலம் பரிவர்த்தனை பத்திரம் மூலமும் சொத்தை பெற்றுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் அப்போது எனக்கு தெரியாது. தாவா 2 முதல் 4 அயிட்ட சொத்துகள் அமாவாசை கவுண்டரின் தாயார் மற்றும் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தனிப்பட்ட சொத்து என்பதால் தான் தன் மகனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் உயில் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா 5 முதல் 7 அயிட்ட சொத்துகள் அமாவாசை கவுண்டரின் தனிப்பட்ட சொத்துகள் என்பதால் அது நீதிமன்றம் மூலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அதில் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. 11 முதல் 14 பிரதிவாதிகள் சொத்தை கிரயம் பெற்ற பிறகு அதை மனை பிரிவுகளாக பிரித்து அபிவிருத்தி

செய்ய போவதாக 2014-15 காலகட்டத்திலேயே செய்திதாளில் விளம்பரபடுத்தியுள்ளார்கள் என்பது எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. மனைபிரிவுகளில் உள் ளரோடு மற்றும் பார்க் பதிவுகளை 14 ம் பிரதவாதி 15ம் பிரதிவாதிக்கு Gift deed எழுதி கொடுத்துள்ளார் என்றால்அப்போது தெரியாது. தாவா சொத்துகள் மூதாதையர் சொத்துகள் என்பதற்கு வாய்மொழி சாட்சியத்தை தவிர ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 1 முதல் 22 வரையான ஆவணங்கள் யாவும் மேற்கண்ட நபர்களின் தனிப்பட்ட சொத்து என்பதனை காட்டும் வகையில் தான் உள்ளது என்றால் சரியல்ல. குப்பாண்ட கவுண்டர் மற்றும் அங்காயம்மமாளுக்கு பரம்பரை சொத்து இருந்தது என் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு பரமபரை சொத்து கிடையாது என்றால் சரியல்ல. 11 முதல் 14 பிரதிவாதிகள் தாவா சொத்துகளை நல்ல எண்ண முறையில் உரிய கிரய தொகை கொடுத்து கிரயம் ெ ற்றுள்ளாரகள் என்றாலும் அதில் நான் உரிமை கோர முடியாது என்றாலும் சரியல்ல. வாசாஆ 1 முதல் 22 வரையான ஆவணங்களில் கண்ட சொத்து விவரங்களும் தாவாவில்உ ள்ள சொத்து விவரமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை சுத்த கரங்களோடு அணுகவில்லை என்றாலும் என் வழக்கு கால வரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (3 ம் பிரதிவாதி தரப்பில்)**

என் இளைய தம்பி தான் கே ஏ ராமசாமி என்றால் சரிதான். ராமசாமியின் மனைவி தான் 2 ம் பிரதிவாதி. மகள் 3 ம் பிரதிவாதி. மகன் 4 ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா சொத்தில் 3 ம் பிரதிவாதிக்கு 1/9 பாகம் கொடுக்க எனக்கு ஆட்சேபணை இல்லை.

**குறுக்கு விசாரணை (5 ம் பிரதிவாதி தரப்பில்)**

5ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் மகள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துகளில் 1/ 12 பாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில்)**

குப்பாண்ட கவுண்டரின் ஒரே மகன் அமாவாசை கவுண்டர் என்றால் சரிதான். குப்பாண்ட கவுண்டர் என் திருமணத்திற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். குப்பாண்ட கவுண்டர் இறந்தவுடன் அவர் சம்பாதித்த சொத்து அவரது ஒரே மகனான அமாவாசை கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. எனது திருமணம் நம் நாடு

சுதந்திரம் அடைவதற்கு முன்பே நடந்தது என்றால் தெரியாது. எனக்கு திருமணமாகி என் கணவர் வீட்டுக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். வசந்தா மில்லில் வேலை செய்த நபரின் மகனுக்கு தான் என் தகப்பனார் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் வீட்டுக்கும் என் கணவர் வீட்டுக்கும் எவ்வளவு தூரம் என்றால் என் கணவர் வீடு வெள்ளலூர். தூரம் தெரியாது. என் தகப்பனார் மில்லில் வேலை பார்த்து என் பாட்டி அங்காயம்மாளுக்கு சொத்து வாங்கி வைத்தார் என்றால் சரியல்ல. என் பாட்டி அங்காயம்மாள் சுயமாக சம்பாதித்து சொத்து வாங்கி தன் மகன் பெயரில் எழுதி வைத்தார். அங்காயம்மாள் சுமார் 15 வருடத்திற்கு முன்பு தான் இறந்தார். அங்காயம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து அவர் இறந்த பிறகு அவரின் ஒரே வாரிசான அமாவாசை கவுண்டருக்கு தான் போகும் என்றால் அமாவாசை கவுண்டரின் மூன்று வாரிசுகளுக்கும் போகும். அமாவாசை கவுண்டர் உயிருடன் இருக்கும் போதே அவரின் வாரிசுகளுக்கு செல்லாது என்றால் சரியல்ல. எனக்கு சட்டப்படி தாவா சொத்தில் எந்த பாகமும் கிடைக்கத்ததக்கதல்ல என்றாலும் நான் தேவையில்லாமல் பாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அமாவாசை கவுண்டர் வசந்தா மில்லுக்கு வேலைக்கு சென்றும், மாட்டு வியாபாரம் செய்து வந்தும் வந்த வருமானத்தை கொண்டு தாவா 4 முதல் 7 அயிட்ட சொத்துகளை தன் பெயரில் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அமாவாசை கவுண்டர் சம்பாதித்த சொத்துகளை அவர் விருப்பபடி கிரயம் கொடுத்துள்ளார் 1ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்டும் எழுதி வைத்துள்ளார் என்றால் அதில் எனக்கு பிரியமில்லை. அமாவாசை கவுண்டரின் இன்னொரு மகன் ராமசாமிக்கு தாவா 7 வது அயிட்ட சொத்தை செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 2020 ல் தான் தெரியவந்தது. அமாவாசை கவுண்டர் அவரைுடைய இரண்டு மகன்களுக்கு மட்டும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் எனக்கு எதுவும் எழுதி வைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் கோர்ட்டுக்கு வந்துள்ளேன். எனக்கு சீர் வரிசை எல்லாம் செய்து இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பே திருமணம் செய்து கொடுத்து விட்டதால் அமாவாசை கவுண்டரின் சுய சம்பாத்திய சொத்தை அவருடைய இரண்டு மகன்களுக்கு செட்டில்மெண்ட்ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றாலும் சில சொத்துகளை 3 ம் நபருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைப்பதற்கு முன்பே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்துள்ளது, அதில் நானும் ஒரு தரப்பினராக இருந்துள்ளேன். அநத் வழக்கில் நான் பாகம் எதுவும் கோரவில்லை. என் தகப்பனார் நானே

பார்த்து கொள்வதாகவும், பங்கு கொடுப்பதாகவும் சொன்னார். அந்த வழக்கு விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதை போல் எந்த வழக்கும் நீதிமன்றத்தில் நடக்கவில்லைஎன்றாலும் அதில் நான் தரப்பினர் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரய பத்திரங்களின் ரத்து பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் அந்த ஆவணங்கள் என்னை கட்டுப்படுத்தும் என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் எனக்கு எந்த சொத்தும் கொடுக்காமல் என்னை ஏமாற்றி விட்டார்.

**மறுவிசாரணை**

இல்லை.

Typed down to my dictation in open court read over to the witness and admitted by the witness to be Correct.

Sd/.G. Sundararajan.,
I Additional District Judge,
Coimbatore.